1982 செப்டம்பர் 10]

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. '' தமிழ் நாடு 1982 ஆம் ஆணடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்யவும், அய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.''

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1982.

மாண்மிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க எண். 3—சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(8) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 127(1)—ஐ தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 127(1)—ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று தமிழ்நாடு 1982-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS